தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர்
கலை இதழ்

ஓய்வாக இருக்கையில் தம்பி—நீ
ஓவியம் வரைந்து பழகு!
தூய்மையோ டமைதி சேரும்!-நன்கு
தோன்றிடும் உள்ள அழகு!

பாக்களும் இயற்றிப் பழகு-நல்ல
பாடலைப் பாடி மகிழ்வாய்!
தாக்குறும் துன்பம் யாவும்-இசைத்
தமிழினில் மாய்ந்து போகும்!

கதைகளும் எழுதிப் பழகு-பூங்
காவினில் உலவி வருவாய்!
புதைந்திடும் அறிவு வளரும்-மனம்
புதுக்கிடும் வாழ்வு பெறுவாய்!

அறிவியல் ஆய்வு செய்வாய்-நீ
அன்றுடச் செய்தி படிப்பாய்!
செறிவுறும் உன்றன் அறிவு-உளச்
செழுமையும் வலிவும் பெறுவாய்!

மருத்துவ நூல்கள் கற்பாய்-உடன்
மனநூலும் தேர்ந்து கற்பாய்!
திருத்தமெய்ந் நூல்கள் அறிவாய்-வரும்
தீமையும் பொய்யும் களைவாய்!

குரல்:3. இசை:6.

விலை 20 காசு.

முயற்சி!

சிலந்தி வலையைப் பாருங்கள்!
சின்னஞ் சிறிய பூச்சியே!
வளைந்து வளைந்து புதுமையாய்
வட்ட வலையைப் பின்னுமே!

தேனீக் கூட்டைப் பாருங்கள்
திறமை யோடு ஒற்றுமை!
பேணி, வீட்டைக் கட்டுமே!
பெரிய முயற்சி வேண்டுமே!

எறும்புப் புற்றைப் பாருங்கள்!
எள்ளைப் போன்ற எறும்புகள்!
அருமையான முயற்சியால்
அழகுப் புற்றைச் செய்தன!

குருவிக் கூட்டைப் பாருங்கள்!
குடுக்கை போன்று பின்னியே,
விரைவில் கட்டி முடிக்குமே!
வேண்டும் முயற்சி என்றுமே!

விளையாட்டு

பந்தைத் தூக்கிப் போடு!
பசிக்கப் பசிக்க ஆடு!

மூச்சைப் பிடித்துப் பழகு!
முகத்தில் தோன்றும் அழகு!

நீளம் உயரம் தாண்டு!
நீ வளர்வாய் நீண்டு!

நாளும் நீரில் நீந்து!
நல்ல மார்பை ஏந்து!

முன்னும் பின்னும் வளை!
முகத்தில் மிளிரும் களை!

மாலை வெய்யில் குளி!
மடிமை என்றும் ஒழி!

பாடல்கள்: துரை-மாணிக்கம்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே !

குரல்-3. | தி பி.-௨௦௦௦ (சுறவம்) பெப்ருவரி 69, | இசை-6.

எதிர்காலம்-1

அன்பின் இனிய தம்பி! இஃதோர் அறிவுப் புரட்சிக் காலம்' அறிவு மிகுதியாக வளர்ந்து வருகின்றது என்று எல்லாரும் பேசிக் கொள்கின்றனர். நாமும் பேசுகின்றோம். வானைமுட்டும் கட்டிடங்கள் கட்டப் பெறுகின்றன. பெரிய பெரிய வயல்களை இயந்திரங்கள் பாய்ந்து உழுகின்றன; விதைக்கின்றன; எருவிடுகின்றன; நீர் பாய்ச்சுகின்றன; களை பறிக்கின்றன; கதிர் அறுக்கின்றன; குத்திப் புடைத்துத் தீட்டிக் கொடுக்கின்றன. இவையெல்லாம் அறிவு வளர்ச்சிதானே தம்பி! இவை மட்டுமா? நெடுந்தொலைவிலிருக்கின்ற நாடுகளுக்கிடையில் அன்றாடம் போக்குவரத்துகள் நடைபெறுகின்றன. உலகின் ஒரு மூலையில் நடக்கும் செய்திகள் உடனுக்குடனே எல்லாப் பகுதிகளுக்கும் அறிவிக்கப் பெறுகின்றன.

பஞ்சாடை கட்டியிருந்த நாம் நார்ஆடை கட்டுகின்றோம். தாளாடையும் புழக்கத்திற்கு வந்து கொண்டுள்ளது. சாரமற்ற உணவை உண்டது போய் நல்ல சாரமுள்ள உணவு செய்யப் பெறு

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

கின்றது. இப்படி உண்ணல், உடுத்தல், உறைதல் என்ற இவற்றில் மட்டுமா அறிவு முன்னேற்றம் பெருகியுள்ளது? இல்லை, பொழுது போக்கு, களியாட்டங்கள், ஆடல், பாடல் முதலிய எல்லாவற்றுள்ளும் இக்கால மாந்தன் முற்கால மாந்தனைவிட எவ்வளவோ முன்னேறியுள்ளான்.

எதிர்காலத்தில் இன்னும் வியப்பான செய்திகளெல்லாம் நடைபெறப் போகின்றன. வாய்நிறையச் சோற்று உருண்டைகளைப் போட்டு மென்று கொண்டிருக்க நேரமிராது. இலை நிறையும்படி காய்கறிகளைச் சமைத்துண்ண ஒய்வு கிடைக்காது. உயிருடன் இருக்கச் சாரக்குளிகைகள் நிறையப் புழக்கத்திற்குவரும். ஒருமணி நேரம் இரண்டுமணி நேரத்திற்கொரு தடவை, அல்லது ஒருநாளைக் கொருமுறை ஒரு குளிகையும் ஒருகுவளை நீரும் போதுமென்று வரும். உடைகளே தேவையில்லை என்றுகூட வரும். அக்காலத்தில் ஒரு கட்டிடமே ஓர் ஊர் என்று நினைக்குமளவில் மக்கள் நெருங்கி வசிக்கலாம். கட்டிடங்கள் அகன்றிரா. மிக உயர்ந்து இருக்கும், உச்சி மாடியிலிருந்து அடிமாடிக்கு வர, சிறு சிறு உந்துகள் பயன்படுத்தப் படலாம். பெரும்பாலும் மக்கள் கீழே வரப் போகத் தேவையில்லாதபடிகூட எல்லா அமைப்புகளும் அங்கங்கேயே வைக்கப் பெற்றிருக்கும்.

இத்தனை முன்னேற்றங்கள் இருந்தும் ஒன்றே ஒன்று அம் மக்களிடத்து இல்லாமற்போகலாம் தம்பி! அதுதான் பண்பாடு—ஒழுக்கம். அந்த நிலையின் முன்னோடியாகத்தான் இப்பொழுதுள்ள உலகம் செயற்பட்டு வருகின்றது தம்பி! இதை நினைத்தால் அச்சமாகவும் அருவருப்பாகவும் இருக்கின்றது; இல்லையாதம்பி! ஆமாம் அப்பொழுதுள்ள உலகம் அச்ச உலகமாகவும் அருவருப்பு உலகமாகவும்தான் இருக்கும். ஒருவருக்கும் ஒருவரும் காவலாக இருக்க முடியாது. அவரவர் தாம் அவரவரைக் காத்துக் கொள்ளும்படி இருக்கும். குடும்பம் இருக்காது; தாய்தந்தைகள் யாரென்று தெரியாது, குழந்தைகள் இருக்கும். அரசாட்சி இருக்கும்; அதிகாரம் இருக்காது. குத்துக் கொலைகள் மிகுந்திருக்கும்; வழக்குகள் இரா. ஒருவனை ஒருவன் குற்றஞ்சாட்ட முடியாது. கல்வி இருக்கும்; கட்டுப்பாடுகள் இரா.

தம்பி, இவையெல்லாம் கற்பனை என்று எண்ணுதே! நடக்கப் போகின்றன; நடக்கத்தான் போகின்றன. எண்ணிப்பார் தம்பி! ஆனல் ஒன்று. இவை கட்டாயம் நடக்கும் என்பதும் நடவா என்பதும் நம் கைகளில்தாம் உள்ளன. ஆமாம். நாம் இன்றைக்கு விதைப்பதுதானே நாளைக்கு வளர்கிறது. நாளை மறுநாள் பயன் தரு

கின்றது. இன்று அவரை விதை போட்டு நாளைக்குக் கத்தரிக்காய் அறுக்க முடியுமா? முடியாது. அதுபோல்தான் இன்று நாம் நடந்து கொள்வதைப் பொறுத்துத்தான் நாளைய மக்கள் குலம் அமையவிருக்கின்றது. இந்த உண்மை இன்றுள்ள எல்லாருக்கும் புரியும், விளங்கும். ஆனால் இதைப்பற்றி எவரும் கவலைப்படவில்லை. இன்றுள்ள மக்களைப்பற்றியே எவரும் கவலைப்படவில்லை என்றால் நாளைவரும் மக்களைப் பற்றி யார் கவலைப்படுவார்கள்? அதனால்தான் சொன்னேன்; நாளைய உலகம் மிகவும் அஞ்சத்தக்கதாகவும் அருவருக்கத்தக்கதாகவும் இருக்கும் என்று.

இதைப்பற்றி எல்லாருமே கவலைப்படாமல் நாம்மட்டும் கவலைப் படுவதால் என்ன பயன் விளையப்போகின்றது? இல்லையா தம்பி, அப்படித்தானே நீ நினைக்கின்றாய்? அதுதான் தவறு. நாம் ஒன்றைப்பற்றிக் கவலைப் படப்பட நம் அருகில் உள்ளவர்களும் அதைப் பற்றி எண்ணிப் பார்க்கவும் கவலைப்படவும் தொடங்குகிறார்கள். அவர்கள் கவலையும் எண்ணமும் மற்றவர்களையும் பற்றுகின்றன. சாவு வீட்டில் ஒருவர் அழ நாமும் அழுது விடுகின்றோம் இல்லையா? அது போல, வலிவான எண்ண முடையவர்கள் எண்ணினால் அந்த எண்ணம் ஈடேறியே தீரும். முன்னால் போகின்ற ஆட்டைப் பின்பற்றித்தானே பின்னால் வரும் ஆடுகள் நடைபோடுகின்றன. எறும்புகளைப் பாருங்கள். முன்னால் உள்ள எறும்பு எப்படி எப்படி வளைகின்றதோ அப்படியே பின்னால் உள்ள எறும்புகளும் சாரை சாரையாகப் போகின்றன அல்லவா?

மக்களினமும் அப்படித்தான். "வல்லான் வகுத்தது வாய்க்கால்" பொதுமக்கள் எப்பொழுதும் ஒருவரைப் பின்பற்றிப் போவதையே விரும்புகின்றார்கள். ஆனால் யாரைப் பின்பற்றுவது என்பதில் தான் குழப்பம் அடைகின்றார்கள். இந்தக் குழப்பத்தைத்தான் ஏமாற்றுக்காரர்களும் அரசியல்காரர்களும் நன்றாய்ப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். அதனால் மக்கள் பலவாறு திசைமாறிச் சிதறுண்டு இழிந்து போகின்றார்கள். இந்நிலையில் முன்னே குறிப்பிட்டவாறு இனி வரப்போகும் பண்பாடற்ற உலகை, அஞ்சத்தக்க உலகை, அருவருக்கத்தக்க உலகை நாம் முயன்றால் வராமல் தடுத்துவிட முடியும். எப்படி? இதைப் பற்றி அடுத்த இதழில் விரிவாகப் பேசுவோம்.

-பெருஞ்சித்திரன்.

கழுதை அழுத கதை.

-துரை-மாணிக்கம்-

காளை உரைத்தவுரை
காதில் கடுநஞ்சாய்க்
கூளைக் கழுதைதன்
கூர்ங்காதில் பட்டவுடன்
உள்ளம் நடுங்க
உயிர்நடுங்கக் கண்ணீரின்
வெள்ளம் பெருக்கெடுக்க
விம்மிவிம்மித் தானழுது,
காளையினை நோக்கிக்
கடுங்குரலில், "அண்ணுவே!
பாளைச் சிறுமியவள்
பால்முகத்தைப் பாருங்கள்.
இச்சிறுமி மேல்உறுதி;
என்கணவன் மேல்உறுதி;
அச்சில்லா தோடிடும்நம்
அண்டத்தின் மேல்உறுதி;
என்கணவன் மாய்ந்தபின்னை
இன்னெருவன் தன்முகத்தை
என்னிறுதி நாள்வரைக்கும்
ஏறெடுத்து நான்பாரேன்.
என்னவென்று எண்ணிவிட்டீர்?
ஏதவுரை கூறிவிட்டீர்?
தின்னுவது மண்ணு? என்
தீய்ந்திருக்கும் உள்ளத்தில்
அம்பன்ருே பாய்ச்சிவிட்டீர்!
அண்ணு பொறுக்கிலையே!
வெம்புகின்ற பெண்ணுயிரை
வீணே துடிக்கவைத்தீர்!
மாந்தரினப் பெண்களைப்போ
என்னை மதித்தீரோ?
வேந்தனென்பார்; தெய்வமென்பார்;
வேண்டித் தவமிருந்து

பெற்ற கணவனென்பார்;
பேச்சுக்கு நூறுமுறை
வெற்றன்பால் 'அத்தான்அத்
தான்' என்றே வீணுரைப்பார்!
தேன்போலும் சொல்அளப்பார்;
திரிபில்லாத் தொண்டுசெய்வார்;
ஆனாலும் உள்ளம்
அழுக்கேற வாழ்ந்திருப்பார்!
கொட்டு முழக்கெடுத்துக்
குத்துவிளக் கேற்றிவைத்துக்
கட்டியபொன் தாலி
கழுத்தில் புரள்கையிலும்
வேறோராள் தன்னை
விரும்பி ஒழுங்கிழப்பார்.
கூறுதற்கே என்றன் நா
கூசி நடுங்கிடுங்காண்!
பெண்டிர்தாம் இங்ஙன், என்று
பேசிவிடல் நன்றன்று;
மண்டுகின்ற ஆடவர்க்கும்
மண்ணில் ஒழுக்கமில்லை!

ஏழையென்றும் செல்வரென்றும்
இவ்வகையில் மாற்றமில்லை;
மோழைப் பகட்டுகளால்
மூடி மறைத்தாலும்
பெண்பாலும் ஆண்பாலும்
பேச்சு மிகுந்தாலும்
பண்பில்லா உள்ளத்தைப்
பார்த்தால் விளங்காதோ?
அத்தகைய பெண்டிரைப்போல்
அண்ணா எனநினைந்தே
இத்தகைய பாழுரையை
என்முன்னர் கூறிவிட்டீர்!
ஊரிழந்து பேரிழந்தே
உண்ண உணவிழந்து

முயல்!

காரை — இறையடியான்.

1 பஞ்சொத்த மேனி, பவழக்கண் காட்டிப்
பாய்ந்தோடும் வெள்ளை முயலே!
குஞ்சமாம் வாலைக் குதித்துப்பின் ஆட்டும்
கூர்மைப்பல் வெள்ளை முயலே!

2. துள்ளியே பாய்ந்து துணையுடன் மேயும்
தூய்மையே, வெள்ளை முயலே!
கள்ளமில் நெஞ்சே! கவினுடல் இன்பக்
காட்சியே, வெள்ளை முயலே!

3. பூவிதழ் போன்று பொலிசெவி யாட்டிப்
புல்மேயும் வெள்ளை முயலே!
மேவிய நல்ல மிளிரெழில் கொண்ட
மேன்மையே, வெள்ளை முயலே!

4. ‡ செம்மரை மொட்டாம் செழுமுகம் கொண்ட
செம்மையே, வெள்ளை முயலே!
அம்பெனப் பாயும் அழகினை யாளும்
ஆட்சியே, வெள்ளை முயலே!

(முன்பக்கத் தொடர்ச்சி)

சீரழிந்து போனாலும்
செத்துத் தொலைந்தாலும்,
கட்டழகில் காளை-
கனைத்தால் பெருங்குதிரை-
பட்டாள வேந்தைப்
பறிகொடுத்த பின்னே நான்
என்றும் தனித்தவள்தான்"
என்றந்தத் தாய்க்கழுதை
முன்னின்ற காளை
முகங்கவிழக் கூறியதே!

(தொடரும்)

5. பாரினில் ° ஆவின் பணிப்பொற்றை பூண்ட
பண்புள்ள வெள்ளை முயலே!
வேரினைத் தோண்டின் வெறுப்பர்காண் உன்னை
வீறெழில் வெள்ளை முயலே!

6. பந்தெனத் துள்ளிப் பலவிடம் ஓடிப்
பாய்ந்திடும் வெள்ளை முயலே!
செந்தமிழ்ப் பாடம் சிறப்பொடு சொல்வேன்
செல்லாதே; வெள்ளை முயலே!

7. வள்ளிக் கிழங்கு வகைவகைக் கீரை
வந்துண்பாய் வெள்ளை முயலே!
பள்ளியில் என்போல் படிப்பவன் யாரே?
பார்க்க வா, வெள்ளை முயலே!

8. தூக்கிய முன்கால் துலங்கிட நில்லேல்;
தோழன் நாள் வெள்ளை முயலே!
தாக்கிட மாட்டேன்; தமிழ்மகன் என்பால்
தாவி வா, வெள்ளை முயலே!

9. மன்னுயிர் காக்கும் மரபினன்; நட்பு
மாட்சியே, வெள்ளை முயலே!
என்னுடன் வாழ எழுந்துநீ வந்தால்
ஏற்றமே; வெள்ளை முயலே!

10. தங்க-வா என்பால் தனித்தமிழ் போலத்
தானேவா, வெள்ளை முயலே!
முங்கவா முப்பால் முறைமையில் நீயும்;
முந்தி-வா, வெள்ளை முயலே!

‡ செம்மரை = செந்தாமரை.
° ஆவின் = ஆவை விட

"தமிழ்ச்சிட்டு" அன்பர்களுக்கு

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் மறைவு குறித்து இரண்டு நாட்கள் அச்சகத்திற்கும் அலுவலகத்திற்கும் விடுமுறை அளிக்கப் பெற்றதால், இம்மாதத் தமிழ்ச்சிட்டு காலங் கடந்து வருகிறது. அன்பர்கள் பொறுத்தருள்வராக.

ஆசிரியர்,
தமிழ்ச்சிட்டு.

உணவைப் பற்றி......!

தொகுப்பு: சி. தமிழ்வென்றி

க. நாம் உண்ணும் உணவு வாயில் ஒரு நிமையத்திற்குக் குறைவான நேரமும், இரைப்பையில் மூன்றுமணி நேரமும், சிறுகுடலில் பத்துமணி நேரமும் தங்குகிறது.

உ. வெவ்வேறு தன்மைகளையுடைய ஐந்துவகை செரிமான நீர்களால் உண்ட உணவு செரிக்கப்படுகிறது

ங. ஆண்களைவிடப் பெண்களுக்கு வயிறு சற்றுப்பெரியது எனவே பெண்களுக்கு எளிதில் உணவு செரித்துவிடும்.

ச. குடலில் உணவின் செரிமானக் குறைவால் வாய்நாற்றம் உண்டாகிறது. ஈறுபழுதடையாமலும் செரிமானம் நன்ருகவும் இருந்தால் வாயில் கெட்ட நாற்றம் எழாது.

ரு. நம் அனைவருக்கும் காலை உணவு மிக இன்றியமையாதது. காலையில் அரைகுறையாக உணவு உட்கொள்ளின் உடல் நலம் கெடும். திறமையும் ஆற்றலும் குறையும்.

சு. வெயிற்காலத்தில் எளிதில் செரிக்கவியலாத உணவை உட்கொள்வது நல்லதன்று.

எ. பாலில் குங்குமப்பூ போட்டுக்குடிப்பது மிக நல்லது. குங்குமப் பூவிலுள்ள ''எமல்சன்'' எனப்படும் பிசுக்குப் பொருள் செரிமான நீர்ச்சுரப்பிகளில் நீரை மிகுதியாகச் சுரக்கச் செய்து பாலை எளிதாக அரத்தத்தோடு கலக்கச் செய்கிறது.

அ. ''பெருலா'' என்னும் பயிர் வெளியிடும் நீர்மப்பொருள் தான் பெருங்காயம். புதராகவளரும் இச்செடியிலிருந்து இழுப்பான் (Rubber) மரத்திலிருந்து பால் எடுப்பது போல் எடுக்கிருர்கள். ஈரானிலும், ஆப்கானிஃச்தானிலும் இப் ''பெருலா'' பயிர் மிகுதியாகப் பயிர் செய்யப் படுகின்றது.

கூ. ஒரு தேனீ பகல் முழுதும் வேலை செய்துவிட்டுத் தன் கூட்டினுள் செல்லும்போது அதனிடத்தில் நாற்பது நுண்சீரெடை (மில்லிகிராம்) அளவு தேன் இருக்கும். இஃது அத்தேனீயின் எடையில் பாதியாகும்.

௰. தவளைகள் உணவில்லாமல் பதினறு திங்களும், கரும் பாம்புகள் இரண்டு ஆண்டுகளும் இருக்கக்கூடும்.

இருண்ட வீடு

மூலக்கதை:- பாவேந்தர் பாரதிதாசன்.

நாடக ஆக்கம்:- கு. ஐந்தெழுத்தன்.

காட்சி-28.

[இரவு ஒருமணி. திருடன் ஒருவன் தெருப்பக்கத்திலிருந்து மாடி மேல் ஏறி, முற்றத்தின் வழியாய்க் கூடத்தில் இறங்குகிறான். உடையோ கருப்பு; இடையில் கத்தி. இந்தக்கோலத்தில் உள்ளே புதந்து விளக்கை அணைத்துவிட்டு, நிலைப்பேழையை அணுகித் தடவிப்பார்க்கிறான். திறவுகோல் அதில் இல்லை. வீட்டுத் தலைவியின் தலைமாட்டிற்த அருகே தடவிப் பார்க்கிறான். அங்கும் இல்லை. சாய்வு நாற்காலியில் படுத்திருந்தவரின் பக்கத்தில் இருந்த குண்டுப்பெட்டிமீது இருந்தது திறவுகோல். அதனை எடுத்து, நிலைப்பேழையைத் திறக்கிறான். அந்த ஓசையைக்கேட்டு நாய்குரைக்கிறது. அவ்வொலி கேட்டுத் தலைவரும், தலைவியும் பையனும் கண்விழிக்கின்றனர். நாய் தெருவில் எதையோ கண்டு குரைக்கிறது என்று எண்ணி, மீண்டும் கண்ணயர்கின்றனர்.]

[சிறிதுநேரம் கழிகிறது. நிறைப் பணத்தாளும், காசுகளும் போட்டுக் கட்டிய பொத்தற் பைகளைக் கையில் தூக்குகிறான், கள்வன். பொத்தல் வழியே சில வெள்ளிக்காசுகள் விழுகின்றன. அவ்வோசை கேட்ட இல்லத் தலைவி 'தலைவர் எதையோ தடவுகிறார்' என்று நினைத்துப் பேசாமல் இருக்கிறாள். 'தலைவி பாக்கைத்தேடத் தடவுகிறாள் போலும்!' என்று தலைவர் நினைத்துக் கொள்கிறார். 'பெருச்சாளி எதையோ உருட்டுகிறது' என்று பெரிய பையன் கருதுகிறான். எனவே ஒருவரும் படுக்கைவிட்டு எழவில்லை. திருடன் பெரிய துணியொன்று தேடி, அதிற் பொத்தற் பைகளை வைத்துக்கட்டி இடக்கையிற்பிடித்து, வலக்கையில் கத்தியுடன் மெல்ல அடியெடுத்து வைக்கிறான்.]

காட்சி-29.

[கள்வன் அடுத்த அடி வைத்தவுடன், பெரியதேள் ஒன்று அவன் காலைக் கௌவுகிறது. தேளை அகற்றக் காலை உதறுகிறான் அவன். அப்போது அவனது கால் பக்கத்திலிருந்த தகரப்பெட்டியில் பட்டதால், சந்தடி ஏற்படுகிறது. உடனே கள்வன் அறைக்கதவின் உட்பக்கம் மறைகிறான்.]

[தலைவர் விளக்கை யேற்றிக் கதவிடுக்கின் வழியாய்க் கள்வனை யும், அவன் கையிற் கத்தியையும் கண்டு பின்வாங்குகிறார். இந்த நேரத்தில், பெட்டிமீதிருந்த வேட்டெகம் (துப்பாக்கி) அவரது கண் ணிற் படுகிறது. அது விளையாட்டு வேட்டெகம் என்று தெரிந்திருந் தும், திருடனை ஓரளவு அஞ்சவைக்கலாம் என எண்ணி, அதை எடுத் துக் கையிற் பிடிக்கிறார்.]

காட்சி–30

[தலைவி கண்விழித்து, 'யாரது, திருடனா?' என்று கேட்கிறாள். அதைக்கேட்டுக் கள்வன் அஞ்சுகிறான். மேலும், தலைவர் கையிற் பிடித்த விளையாட்டு வேட்டெகத்தை மெய் வேட்டெகமென்று நினைத்து நடுங்குகிறான். பணத்தைக் கொடுத்துவிட்டுப் போக நினைக் கிறான்]

கள்வன்- (கெஞ்சும் குரலில்) ஐயா, என்னைச் சுடாதீர்கள்!

தலைவர்: எடுத்ததை வைத்துவிட்டுப் பிடி ஓட்டம்; இல்லையேல் பிழைக்கமாட்டாய்! சுட்டுப் பொசுக்கிவிடுவேன்!

பெரிய பையன்: (தந்தையை நோக்கி) அப்பா! அதுபொய் வேட்டெ கம்! வெடிச்சா தக்கைதான் வரும்; குண்டு வராது!

கள்வன்: (அச்சம் தீர்ந்து) ஓ! அவ்வளவுதானா? வெத்து வேட்டுக் குத்தான் இத்தனை வீருப்பா?...சரி, சரி தெருப்பக்கம் போகிறவழி இதுதானா? (பணமூட்டையுடன் நடக்கிறான்.)

[கள்வன் கையிற்கத்தியைக் கண்ட தலைவரும், தலைவியும்; பைய னும் குலைநடுக்கத்தால் வாய் அடைத்துக் கிடக்கின்றனர்.)

காட்சி–31.

தலைவர்: (திருடன் சென்ற பின்பு) அட பயலே! கொலைகாரன்தான் எனக்குக் குழந்தையா வந்து பிறந்தாயா? கை வேட்டெகத் தைக் கண்டு கள்ளப்பயல் நடுநடுங்கினான், நீ என்னடான்னா அது பொய்த் துப்பாக்கி என்று புரிய வைச்சுட்டே. அவன் பணத்தையெல்லாம் மூட்டைகட்டித் தூக்கிக்கொண்டு போயே போய்விட்டான்! அட, சீ! என் மகனா நீ! (எதிரில் இருந்த சந்தனக்கல்லை எடுத்துச் சினத்துடன் எறிகிறார். பையனை நோக்கி யெறிந்த அந்தக்கல் குறிதவறிப்போய், அவருடைய மனைவி மார்பின்மேல் விழுகிறது. 'ஆ' என்று அலறுகிறாள் அவள்.]

காட்சி-32.

[இரண்டாம் முறையாக அவர் வீசிய முக்காலியால் பெரிய பையன் உயிர் துறந்தான். எண்ணெய் இல்லாமையால், விளக்கும் அணைந்தது. அறிவில்லார் நெஞ்சபோல, அந்த வீடு இருண்டு கிடந்தது. மீண்டும் விளக்கேற்ற நினைத்துத் தீப்பெட்டியைத் தேடுகிறார், தலைவர் கிடைக்கவில்லை. அஃது இருக்குமிடம் குறித்து மனைவியைக் கேட்கலாமா, வேண்டாவா என்று எண்ணிக்கொண்டிருக்கையில், அண்டை அயலார் ஒவ்வொருவராக அங்கு வருகிறார்கள்]

சீனன்: என்ன கூச்சல்? திருடன் உள்ளே நுழைந்துவிட்டானா?

எட்டியப்பன்: முதலிலே, விளக்கை யேற்று, ஐயா!

எல்லிக்கிழவி: ஆமாம்; குழந்தைக்கு உடம்பு சரியில்லாமல் இருந்ததே! இப்போ எப்படி இருக்கிறது?

தலைவர்: (மனைவி படுத்திருந்த பக்கம் திரும்பி) ஏ, பிள்ளே! எழுந்து விளக்கு ஏற்று! (மறுமொழி இல்லாமையால், மகன் பக்கம் திரும்பி) ஏண்டா, பையா! நீயாவது எழுந்து விளக்கேற்றடா? (விடை கிடைக்காமையால், சலிப்புடன்) சரிதான்! எல்லாருக்கும் என்மேலே வருத்தம் போல் இருக்கிறது!

[அண்டை வீட்டினர் விளக்கேற்றிக் கொண்டு வருகின்றனர். விளக்கு வெளிச்சத்தில் கிழவி முதலில் குழந்தையைப் பார்க்கிறாள். அது மாண்டு கிடக்கிறது. 'ஐயோ! குழந்தை செத்துவிட்டதே!' என்று அலறுகிறாள். அடுத்த சில கணத்திற்குள், மனைவியும் பையனும் மடிந்தது தெரிகிறது. தெருவினரும் ஊர்மக்களும் கூட்டம் கூட்டமாக வீட்டினுள் நுழைகின்றனர். ஊர்க்காவலர் ஐவர் வந்து, நடந்தவை குறித்துக் குற்ற ஆராய்ச்சி நடத்துகின்றார்கள்.]

பாவேந்தர் கூறும் படிப்பினை:

எல்லா நன்மையும் தரும் கல்வி இல்லாத வீடு இருண்ட வீடே யாகும். படிப்பு இல்லாதவர் நடத்தும் குடும்பம் சுடுகாட்டின் வாழ்வு போன்றதே! அறிவற்ற குடும்பம் நெறிதவறிச் சென்று, நிலை தடுமாறும். கடல்போற் செல்வம் இருப்பினும், கல்வியில்லாதவன் கண்ணில்லாதவனே. அரிமாப்போன்ற வலிமையுடையவனும், கல்வியில்லை யேல் கடிதில் வீழ்ச்சியடைவான். கல்லாதவனிடம் எல்லா நோயும் எப்போதும் உண்டு.

ஆதலின், யாவரும் கற்க. மனம் தளராது கற்க. ஆடவர், பெண்டிர் அனைவரும் கற்க. முதியோரும் கல்வியில் முயற்சி கொள்க. இரு விழியிலாரும் கற்க; அதனால், பலவிழிகள் படைத்தவர் ஆவர். ஊமையும் கற்க; உள்ளம் நலம்பெறும். இல்லார் அனைவர்க்கும் கல்வி வந்திடின், எல்லா நலமும் இவ்வுலகு எய்திடும். முற்றும்.

தெரிந்து கொள்ளுங்கள்

O சருக்கரையை விட 300 மடங்கு இனிப்பானது, 'சாக்கரின்' என்ற செயற்கை இனிப்புப் பொருள்.

O ஈ பறக்கிற வேகம் மணிக்கு 5 கல்.

O உலகிலேயே மிகப்பெரிய புத்தகசாலை பாரிசில் உள்ள "பிப்ளயே தெகுநேசனல்" புத்தகசாலையே!

O முதல் முதல் இந்தியாவில் பல்கலைக்கழகம் தோன்றிய இடம் சென்னை.

O உலகில் உள்ள மொத்த எரிமலைகள் (11000) பதினோராயிரம்.

O "எல்க்ட்ரான்" என்ற கிரேக்க மொழிச் சொல்லிலிருந்துதான் 'எலக்ட்ரிசிடி' என்ற ஆங்கிலச்சொல் பிறந்தது.

O ஆத்திரேலியாவில் நீர்குடிக்காமலேயே உயிர்வாழும் கரடியின் பெயர் கூலா.

O கப்பலில் தீப்பிடிக்கப் போகிறது என்பது எலிகளுக்குத் தெரிந்து விடுமாம்.

∧ குதிரையின்மேல் மொய்க்கும் ஈ மணிக்கு 30 கல் வேகம் பறக்கிறது.

□ பொன், வெள்ளி இவற்றால் காந்தத்தை உண்டாக்க முடியாது.

□ உலகிலேயே மிக உயரமான நிலைத்திணை தென் அமெரிக்காக் கடல் வட்டத்தில் உள்ளது. அதன் உயரம் 600 அடி.

(தொகுப்பு: ந. இராசேந்திரன் கூகூர்)

தமிழ்ச்சிட்டு கடலூர்-1.

தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு.	வெளிநாடு, கொழும்பு
ஆண்டுக் கட்டணம் உருபா.	2-50	4-00
தனியிதழ் ,,	0-20	0-30

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு 40 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

கலீலியோ கலிலீ

மா. பூங்குன்றன்.

தண் தமிழ்ச்சிட்டுகளே!

பலர் வாழ்க்கையின் இன்றியமையாப் பல பகுதிகளைக்கண்டோம். அவற்றில் அறிவியல் நுட்பம், அடக்கம், பொறுமை, பணிவு, நன்-காய்ந்து முடிவுரைத்தல் போன்ற பண்புகளைக் கொண்டவர்களில் ஒருவரின் வாழ்க்கைத் தொகுப்பையும் சேர்த்துக் கொள்வோம். அவ்வறிஞரே கலீலியோ கலிலீ.

கலீலியோ கலிலீ என்பவர் 1564-இல் இத்தாலி நாட்டில் பிறந்தவர். இவர் தந்தை இசைப்பயிற்சி மிக்கவர். கலீலியோ தந்தையைவிட இசைப்பயிற்சியில் தேர்ந்தவர். வானவெளி உடுக்களும் பலவகை இசைகளை உண்டாக்கியதாக இவர் உணர்ந்தார். அக்காட்சிகளில் தம் மனத்தைப் பறிகொடுத்தார். இவர் பள்ளிப்படிப்பில் கருத்து செலுத்தவில்லை. ஆசிரியரின் பாடங்கள் செவிடன் காதில் ஊதிய சங்கொலி போன்று பயனற்றுப் போயின. பள்ளிக்குச் செல்லாமல் படகு, வண்டி, மற்றும் பல சிறிய விளையாட்டுப் பொருட்கள் செய்து விளையாடுவார். இப்படியே இவரது தொடக்கப்பள்ளி வாழ்க்கை முடிந்தது. தம் பன்னிரண்டாம் அகவையில் துறவிகள் பள்ளியில் சேர்ந்து பயில விரும்பினர். சமய உண்மைகளைப் பரப்பவேண்டும் என்று நினைத்தார். தந்தையார் வணிகத்துறையில் ஈடுபடுத்த நினைத்தார்.

கடைசியில் மருத்துவம் படிக்கத் தொடங்கினர். பல அறிவியல் நூல்களை பாடநூல்களின் இடையில் மறைத்துப் படித்தார்; பல ஆய்வுகள் செய்தார். பேராசிரியர்கள் பலர் இவர்தம் ஆய்வுகளைக் கண்டு ''அரிசுடாட்டில் கூறியதே முடிவான கருத்து; இதற்கு மேற் கண்டறிய வேறொன்றுமில்லை'' என்று பலவாறு கூறி எள்ளி நகையாடினர். ''தெரியாத செய்திகளில் தலையிட வேண்டா'' எனத் தந்தையும் அச்சுறுத்தினர்.

பைசா நகரக் கிறித்தவக் கோவிலில் இறைவனை வேண்டுகின்ற சமயம் விளக்கு ஒன்று ஊசலாடி அமைதியைக் கெடுத்தது. அவ்வலைவு ஒவ்வொன்றுக்கும் குறித்த நேரமே ஆயிற்று. துள்ளியெழுந்து, யாவரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டு, ஓடிவந்தார் வீட்டிற்கு. கண்டுபிடித்தார் சுவர்க்கடிகாரத்தை! இவரிடமிருந்தவை அரிசுடாட்டில் நூல்களல்ல. பஞ்சுநூல், ஈயக்குண்டு, நெருப்புகோல், வட்டம்] முதலியவையே. இவற்றை வைத்து விளையாடும் பேராசிரியர்தான் இவர்.

ஒரு குறிப்பிட்ட உயரத்திலிருந்து நிறை வேறுபாடுகளுள்ள இரு பொருள்கள் ஒரே விசையில் ஒரே சமயத்தில் நிலத்தை அடைகின்றன என்று கலீலியோ கூறினுர். மற்ற பேராசிரியர்கள் அதை எள்ளி நகையாடினர். ஏனெனில் அதை அரிசுடாட்டில் கூறவில்லையாம். பேராசிரியர்கள் யாவரும் கலீலியோ தம் கொள்கையை உறுதிப்படுத்த முடியாமல் தோல்வியடையப் போகின்ருர் என்று, பெரிதும் மகிழ்ந்தனர். கலீலியோவும் மகிழ்ந்தார், நாம் சிறந்ததொரு கொள்கையை நிலைநாட்டப் போகின்ருேம் என்று. பைசா நகர சாய்ந்த கோபுரத்தைச்சுற்றி ஒரே கூட்டம். ஒரே முணுமுணுப்பு. கலீலியோ மகிழ்வுடன் பத்து சிற்றெடை (Gram) இரும்புத்துண்டு ஒன்றும் ஒரு சிற்றெடைத் துண்டு ஒன்றும் எடுத்துக்கொண்டு கோபுரத்தின்மேல் ஏறி இரண்டையும் ஒரே சமையத்தில் கீழேபோட்டார். அவை ஒரே சமையத்தில் பூமியை அடைந்தன. மக்களின் மகிழ்ச்சிக்குரல் கலீலியோ காதில் தேனை யூற்றியது.போல் இருந்தது- பேராசிரியர்களின் பொருமை அவர்களின் கண்களை மறைத்தது. அவர்கள் கண்ணுற் கண்டதையும் நம்பாமல் அது கண்கட்டு வித்தை யென்றனர்.

முதலாம் காசிமோவின் மகனுர் துறைமுகத்தைத் தானுகத் தூய்மை செய்யும் பொறி ஒன்றைக் கண்டுபிடித்தார். அதைக் கலீலியோவிடம் ஆராயக் கொடுத்தபொழுது அது சரியாக வேலை செய்யாதென அவர் தமது உள்ளக்கருத்தை உரைத்தார். அதனுல் காசிமோ வெள்ளச்சினம் கொண்டு, விலக்கச் செய்தார், பைசா பல்கலைக்கழகத்தினின்றும். தொல்லை தீர்ந்தென எண்ணிய கலீலியோ பாதுவா பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ருர்.

மெரினு காம்பாஎன்ற பெண்மணியுடன் கலீலி குடும்பம் நடத்தினுர். மூன்று குழந்தைகளும் பிறந்தனர். அக்காலத்தில் நகைச்சுவை மிக்க நாடகங்களை மக்கள் விரும்பினர். கலீலியோ நாடகங்கள், கேளிக்கைப் பாடல்கள் எழுதுவதில் வல்லவராக இருந்தார். இவரே நாடகத்தில் நடித்துமிருக்கிருர். தொலைநோக்கி ஆடி (Lens) களின் (குழி, குவி) வகைகளை ஆய்ந்து அவற்றின் ஆற்றலை மிகுதிப்படுத்த இரண்டையும் இணைத்து ஒருதொலைநோக்கி (Telescopo) செய்தார். அதை மக்களிடம் விளம்பரப்படுத்தினுர். மக்கள் பலவாறு போற்றி வியந்தனர். இதன்மூலம் பல அறிவியல் உண்மைகளைக் கண்டார். அதன் பயனுகப் பல அறிவியல் வல்லுநர்களும் அறிமுகமாயினர். அவர், ஞாயிற்றை

உலகம் சுற்றுகிறது என்ற உண்மையையும் அறிந்திருந்தார். ஆனால், கியார்டனோ புருனோ என்ற அறிவியலாளர் தாம் கண்ட உண்மைகளை வெளிப்படையாகக் கூறியதால் கழுமரத்தில் எரிக்கப்பட்டதை அறிந்திருந்ததால்; தாம் கொண்ட முடிவை வெளிப்படுத்தவில்லை.

கலீலியோ எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தும் சமயக்குழுவினர் அவர்மீது வழக்குத் தொடர்ந்தனர். 1616-இல் நடந்த வழக்கில், "அறிவியலாளரே! நீர் கூறுவன மதக் கொள்கைக்கு மாறானவை. இந்த நொடிமுதல் கோள்களின் கருத்தை மறந்துவிடும். அவற்றை நெஞ்சாலும் நினைக்கக் கூடாது" என்றனர். அவர்கள் நீட்டிய உறுதி மொழித்தாளில் மனநிறைவின்றி கலீலியோ கையொப்பமிட்டார். அவர் தம் மனத்துள், "எனக்குக் கட்டளையிட்டால் கோள்களின் இயக்கம் நின்றுவிடாது" என எண்ணி வெட்கத்துடன் பிளாரன்சு நகருக்குத் திரும்பினார்.

பின்னர் தாம்கண்ட உண்மைகளை நூலாக வெளியிட்டார். குருட்டு நம்பிக்கைகள் இதனால் பெரிதும் குறைந்தன. எனவே மறுமுறையும் 1633-இல் அவர்மீது வழக்குத்தொடர்ந்தனர். அவ்வமையம் கலீலியோ நோய்வாய்ப்பட்டிருந்தார். என்ன ஆயினும் வந்தே ஆக வேண்டுமென வழக்குமன்றத்தினர் அழைத்தனர். பல எதிர்ப்புகளுக்கிடையில் கலீலியோ தம் கொள்கைகளை ஆணைக்கஞ்சாமல் கூறிவிட்டார்.

நிலவு, உலகம் போன்றவை கோளங்களே என்ற உண்மையையும் பால்வழி மண்டிலத்தையும் புதிய கோள்களையும் கண்டறிந்தார். கிணற்றுநீரை மேல்நோக்கிக் கொண்டுவரும் கருவியையும், கடிகாரத்தையும், வெப்பமானியையும், தொலைநோக்கியையும் முதன் முதலில் கண்டுபிடித்தவர் இவரே.

கடைசியில் அரசினர் அவர் நூல்களை பரப்பக்கூடாதென்றும் அவர் வெளியே திரியக்கூடாதென்றும் கூறி, சிறையில் அவரை அடைக்கவும் கட்டளையிட்டனர். சிறையில் அவர் பலநூல்களை எழுதினார். ஆனால் அந்நூல்களைக் காணும் பேறு பெறவில்லை; தொட்டே யுணர்ந்தார். ஏனெனில் அவர் கண்கள் ஒளியிழந்தன. இந்நிலையில் 1642-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8-ஆம்நாள் புலாலுடல் நீத்துப் புகழுடல் பெற்றார். 0

சென்ற மாதப் புதிரின் விடை.

நான் வானூர்தி நிலையத்திற்குச் சென்றபொழுது மணி 7–24.

இம்மாதப் புதிர்–1.

சதுரமான ஒரு குதிரைக் கொட்டடியின் நான்கு புறமும் குதிரைகள் கட்டப்பட்டிருந்தன. அந்தக் குதிரைகளை ஒருமூலையிலிருந்து இன்னொரு மூலை வரை எண்ணிப் பார்த்ததில் பக்கத்திற்கு 12 இருந்தன. ஒருவன் முதல் நாள் மாலை வந்து மேலும் 4 குதிரைகளை முதலிலிருந்த குதிரைகளுடன் சேர்த்துக் கட்டினான். ஆனால் அப்பொழுதும் குதிரைகள் பக்கத்திற்கு 12 ஆகவே இருந்தன. அன்றைய நாள் இரவில் திருடன் ஒருவன் வந்து மொத்தத்தில் 8 குதிரைகளை அவிழ்த்துக்கொண்டு பக்கத்திற்கு 12 குதிரைகளே இருக்கும்படி, குதிரைகளை மாற்றிக் கட்டிவைத்து விட்டுப் போனான். குதிரைக்காரன் மறுநாள் காலை வந்து குதிரைகளை மூலைக்கு மூலை எண்ணிப் பார்த்துவிட்டு அவை சரியாகவே இருப்பனவாகக் கருதிச் சென்றான்.

அந்தக் குதிரைக் கொட்டடியில் முதல்நாள் கட்டப்பட்ட மொத்தக் குதிரைகள் எத்தனை? மூன்று முறையும் குதிரைகள் எவ்வெவ் வகையில் கட்டப்பட்டிருந்தன?

இப்புதிரை எழுதி விடுத்த தம்பி:

இ. செயராமன், சிவன் கோவில் தெரு, மடுக்கரை. (தெ. ஆ.)

புதிர்–2.

100 கல் உயரமுள்ள ஒரு குன்றின் உச்சியில் 2 துறவிகள் இருந்தனர். அக் குன்றின் அடியிலிருந்து 200 கல் தொலைவில் சிற்றூர் ஒன்று இருந்தது. அத்துறவியரில் ஒருவர் குன்றிலிருந்து கீழே இறங்கி அந்தச் சிற்றூர்க்குச் சென்று இரந்து உண்டார். மற்றவர் மந்திரம் தெரிந்தவராகையால் குன்றின்மேல் கொஞ்சம் உயரக் கிளம்பி நேரே அங்கிருந்து சிற்றூரில் சென்று இரந்து உண்டார். இருவர் சென்ற தொலைவும் ஒரே அளவாக இருந்தன. இரண்டாவது துறவி குன்றைவிட்டு மேலே பறந்த தொலைவு எவ்வளவு?

இப்புதிரை எழுதி விடுத்த தம்பி:

இரெ. சந்திரன், பாரதியார் தெரு, மதுரை–10.

விடைகள் அடுத்த இதழில்.

சமசுகிருதத்தில் தமிழ்ச்சொற்கள்.

தமிழ்	சமசு(வ. மொழி)	தமிழ்	சமசு(வ.மொழி)
உத்தரம் (மறு மொழி)	உத்தர	கஃசு (காற் பலம்)	கர்ஷ
உந்து(நீரெழுச்சி)	உந்த்	கக்கட்டம் (உரத்தகுரல்சிரிப்பு)	கக்கட்ட
உம்பர்	உபரி	கக்கரி(முள் வெள்ளரி)	கர்க்கடீ
உரம்	உரஸ்	கச்சை(நாடாப் பட்டை)	கக்ஷ்யா
உரு(தோன்றுதல்)	ருஹ்	கஞ்சி	காஞ்சி
உருவம்	ரூப	கட்கம்(அக்குள்)	கக்ஷ
உருத்திரம்	ருத்ர	கட்சி(காடு)	கக்ஷ
உலகம்	லோக	கட்டில்	கட்வா
உவமை	உபமா	கட்டை	காஷ்ட
உற்கம்	உல்க	கடகம்(வளையல்)	கடக
ஊசி	சூசி	கடம்பு	கதம்ப
ஊதை	வாதை	கடாகம்(வட்டக் கொப்பரை)	கடாஹ
ஊர்(ஏறு)	ரோஹ்	கடி	காத்
எருமை	ஹெரம்ப	கடிகை(நாழிகை கடிகாரம்வட்டில்)	கட, கடீ கடிகா.
எல்லரி(ஒருவகைப் பறை)	ஜல்லரி	கடு(வன்மை)	கட்
ஏது	ஹேது	கடு(முள்)	கடு
ஏமம்(காப்பு)	க்ஷேம	கடுகு	கடுக
சேமம்(காப்பு)	க்ஷேம	கடைகால்	கடிகா
ஏலம்	ஏலா	கண்(புறப்பார் வை)	கண் (அகப்பார்வை)
ஒட்டகம்	உஷ்ட்ரக	கண்ணியம்	கண்ய
ஓடம்	ஹோட	கண்டகம்	கண்டக
ஓடு	ஹோட்	கண்டகி (தாழை,மூங்கில்)	கண்டகி(ன்)
ஓம்	ஓம்	கண்டு(கட்டி)	கண்ட

தமிழ்	சமசு(வ. மொழி)	தமிழ்	சமசு(வ.மொழி)
கண்டி(துண்டித்தல்)	கண்ட்	காஞ்சி	காஞ்சீ [ஆற்றுப்பூவரசு]
கண்டிதம்(கண்டிப்பு)	கண்டித	காஞ்சி [அரைப்பட்டிகை]	காஞ்சீ
கண்டனம்	கண்டன	கலகம்	கலஹ
கண்டை(திரண்டமணி)	கண்டா	கலவம்	கலாப
கணக்கன்	கணக்க	கலவம்(மயில் தோகை)	கலாப
கணம்	கண	கலுழன்	கருட
கணி	கண்	கலுழம்[கலங்கல் நீர்]	கலுஷ
கணிதம்	கணித	கல்லை[தொன்னை]	கல்ல
கணி[சோதிடம்]	கணி	கலுவம்	கல்வ
கணிகை	கணிகா	கலை	கலா
கத்தரி[கை]	கர்த்தரி[கா]	கவளம்	கவல
கதம்பம்	கதம்ப	கவுள்	கபோல
		கவான்[தொடைச் சந்து]	கவீனீ
கதலி[சிறுவாழை]	கதலி[லீ]	கழஞ்சு	கலஞ்ச
கதை	கதா	கள்வன்	கலம்
கந்தன்	ஸ்கந்த	களங்கம்	கலங்ம்
கந்துகம்	கந்தக	காளம்[கருமை]	கால
கந்தை	கந்தா	களம்[வயல்]	கல
கப்பரை	கர்ப்பர	களம்[தொண்டை]	கள
கம்பலம்	கம்பல	களி	கேல்
கமுகு	க்ரமுக	களை[அயர்]	களை
கரு[சூல்]	கப்ப	கன்னம்	கர்ண
கருள்[கருமை]	க்ருஷ்	கன்னி	கன்யா
கரை	க்ரு	கன்னிகை	கன்யா
கல்[ஒலி]	கல்	கனம்	கன
கல்(தோண்டு)	கன்	காக்கை	காக்க

[தொடரும்]

(பாவாணர் வடமொழி வரலாறு)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.